unicef | for every child

*ஊடக அறிக்கை*

# தமது பிள்ளைகள் தமது முழுமையான ஆற்றலை அடைவதனை உறுதி செய்வதற்கு இலங்கைப் பெற்றோர்களுக்கு மேலும் உதவி தேவை என்கிறது யுனிசெப்

*பெற்றோர்களுக்கான உலக தினத்தை குறிக்கும் வகையில், BetterParenting.lk என்ற இணையத்தளத்தை யுனிசெப் அறிமுகப்படுத்துகின்றது. தமது பிள்ளைகளின் மூளைகளை கட்டியெழுப்புவதற்கு உதவத் தேவையான வழிகாட்டலை பெற்றோர்களுக்கு வழங்குவதற்கு 'விசேட சக்தி' பெற்றோருக்கான பிரசாரத்தில் பாடகர்* ***ரொமேஸ் சுகதபால****, வானொலி புகழ்* ***சாக்,*** *நடிகை* ***சச்சினி அயேந்ரா*** *ஆகியோர் உள்ளனர்.*

கொழும்பு, இலங்கை, 3 ஜுன் 2019: பெற்றோர்களுக்கான உலக தினம் (ஜுன் 1) மற்றும் தந்தையர் தினம் (ஜுன் 16) ஊடாக பெற்றோர்களின் வாழ்க்கையை மாற்றும் வகிபாகத்தினை உலகம் கொண்டாடும் வேளையில், முழு வாழ்விலும் தமது பிள்ளையின் மூளை அபிவிருத்தியில், எதிர்காலத் தலைமுறைகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் ஆரம்ப பராமரிப்பு, சமூகமயப்படுத்தல் மற்றும் ஒழுக்க பயிற்சிகள் ஊடாக பிள்ளை ஒன்றின் முதல் ஐந்து வருடங்களில் பெற்றோர்கள் ஆற்றக் கூடிய மிக முக்கியமான வகிபாகம் குறித்து யுனிசெப் கவனத்தை திருப்புகின்றது.

'உண்ணல், விளையாடல் மற்றும் அன்பு செலுத்தல்' என அறியப்படும், பிள்ளைகள் சிறந்த ஊட்டச்சத்து, தூண்டல் மற்றும் பாதுகாப்பினை பெறுவதனை உறுதி செய்வதில் பெற்றோர் முக்கிய பங்கு வகிக்கின்றனர். தமது பிள்ளைகள் முழுமையான ஆற்றலை எட்டுகின்றனர் என்பதனை உறுதி செய்வதற்கு அவர்களுக்கு மேலும் உதவி தேவையாகும். **சிறந்த ஊட்டச்சத்து** வழங்குவது என்பது மூளை வளர்ச்சியை தூண்டுகின்றது. பிற்காலத்திற்கு மாற்றுவதற்கு கடினமான விதத்தில், மூளையின் செயற்பாடு மற்றும் அமைப்பில் தாக்கத்தைப் புரிவதாக முதல் ஐந்து வருடங்களில் போதியளவு ஊட்டச்சத்து வழங்காமை உள்ளது. இதன் மத்தியில், இலங்கையில் 6-23 மாதங்கள் வயதுடைய 38 வீதமான சிறுவர்கள் உணவு பல்வகைமை மற்றும் உணவு உட்கொள்ளும் அளவு* என்பதன் அடிப்படையில் "ஆகக் குறைந்த ஏற்றுக் கொள்ளக் கூடிய உணவுப் பழக்கம்" கொண்டவர்களாக இல்லை. ஐந்து வயதுக்கு குறைந்தவர்களில் 17 வீதமானோர் வளர்ச்சி குன்றியோர். 15.1 வீதமானோர் விரயமானவர்கள். இவை அனைத்தும் மோசமான ஊட்டச்சத்தின் விளைவாகும். 2006 மற்றும் 2016இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில், எவ்விதமான முக்கியமான மாற்றமும் அவதானிக்கப்படவில்லை*. சாதகமாகவும், நிரந்தரமாகவும் இளைஞர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு இடையில் ஊடாடல் ஊடாக **விளையாடல் மற்றும் தூண்டலை** வழங்கி, கற்பதற்கான சிறுவர்களின் ஆற்றலை நிரந்தரமாக வலுப்படுத்த முடியும். இருப்பினும் இலங்கையில், வீட்டில் சிறுவர்களுக்கான புத்தகங்கள்* எதுவும் இல்லை என 19.4 வீதமான சிறுவர்கள் தெரிவித்தனர். ஆரம்பத் தூண்டலுக்கான மிக முக்கியமான ஒரு வடிவத்தினை அவர்கள் தவறவிடுகின்றனர் என்பதே அதன் அர்த்தமாகும். **அன்பு மற்றும் துஷ்பிரயோகத்தில் இருந்து பாதுகாப்பு** என்பவற்றை வழங்குவதன் மூலம், மூளை வளர்ச்சியைப் பாதிக்கும், உடல்நலன், கற்றல் மற்றும் நடத்தையை பாதிக்கும் 'நச்சான அழுத்தம்' என்பதனை பெற்றோர்கள் தடுக்க முடியும். எவ்வாறாயினும், 1-14 வயதுக்குட்பட்ட 73.4 வீதமானவர்கள், பெற்றோரினால் உடல் ரீதியான தண்டனையை அனுபவிக்கின்றனர்**.

தமது பிள்ளைகளுக்கு பெற்றோர் சிறந்த ஆரம்பத்தை கொடுப்பதற்கு உதவுவதற்கு, சிறுவர் பராமரிப்பு, சிறுவர் அபிவிருத்தி, உணவு மற்றும் ஊட்டச்சத்து மற்றும் உடல் நலன் ஆகிய நான்கு பிரிவுகளில், ஆக்கங்கள், காணொளி மற்றும் வரைபடைகலை ஊடாக முழுமையான நிபுணர் தகவல்களை ஒன்றிணைக்கும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழியிலான இணையத்தளம் ஒன்றான www.BetterParenting.lk, இனை இன்று யுனிசெப் அறிமுகப்படுத்தியது.

www.BetterParenting.lk அறிமுகத்திற்கு ஆதரவளிக்கும் வகையில், புதிய 'பெற்றோரின் சுப்பர் சக்தி' விளம்பர பிரசாரம் ஒன்றையும் யுனிசெப் அறிவித்துள்ளது. இதில் பிரபல பாடகர் ரொமெஸ் சுகதபால, பிரபல வானொலி அடையாளம் **சாக் (ரியாஸ் சா ஜஹான்)** மற்றும் நடிகையுடன் முன்னாள் இலங்கை அழகியுடான **சச்சினி அயேந்ரா** ஆகியோரினால், ஒவ்வொருவரும் தமது இளம் பிள்ளைகளுடன் இந்த பிரசாரம் முன்னெடுக்கப்படுகின்றது. **இளங்கோ இராம்** அவர்களால் இயக்கப்பட்டு, 60 செக்கன்கள் கொண்ட மூன்று காணொளிகள், தமது பிள்ளைகளை வளரச் செய்வதற்கு ஒவ்வொரு பெற்றோரும் எவ்வாறு 'சுப்பர் சக்தி' கொண்டிருக்கின்றனர் என்பதனை வெளிப்படுத்துகின்றது.

*"இளம் பிள்ளைகளின் வாழ்க்கையில் மிகவும் முக்கியமான நபர்களாக அவர்களது பெற்றோர் மற்றும் பராமரிப்பு வழங்குவோர் உள்ளனர்"* என யுனிசெப் இலங்கையின் பிரதிநிதி ரிம் சுட்டன் தெரிவித்தார். *"சிறந்த உடல்நலன்*

*மற்றும் ஊட்டச்சத்து, அன்பு மற்றும் பராமரிப்பு, பாதுகாப்பு, தரமான ஆரம்ப கற்றல் என்பவற்றில் பிள்ளை ஒன்றின் அபிவிருத்தி தங்கியுள்ளது. தமது பிள்ளைக்கு சிறந்ததனை செய்வதற்கு ஒவ்வொரு பெற்றோரும் விரும்புகின்றனர். தமது பிள்ளைகளின் ஆரம்ப வருடங்களில் பெற்றோர்களுக்கு உதவுவதன் மூலம், முழுமையான வளர்ச்சியடைவதற்கான மற்றும் தாமும், தமது சமுதாயமும், தமது நாடும் முன்னேறுவதற்கான அனைத்து சிறுவர்களினதும் உரிமையை நாம் முழுமைப்படுத்த முடியும்"* என அவர் மேலும் கூறினார்.

சிறுவர்களுக்கான பாதுகாப்பினை வழங்குவதற்கு ஆதரவான கொள்கைகள், நிகழ்ச்சிகள் மற்றும் சேவைகள் என்பன குடும்பங்களுக்குத் தேவை. கடந்த 12 மாதங்களில் இலங்கை அரசாங்கமானது, *தேசிய ஆரம்ப சிறுபராய பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி கொள்கை, தேசிய மாற்றுப் பராமரிப்பு கொள்கை* உள்ளடங்கலாக போஷித்தல் பராமரிப்பிற்கு ஆதரவான பல்வேறு முக்கியமான கொள்கைகளை அனுமதித்துள்ளது அல்லது நடைமுறைப்படுத்தியுள்ளது. 2019 தேசிய வரவு செலவுத் திட்டத்தில் ஆரம்ப சிறுபராய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக மாகாண சபைகளுக்கு நிதி வழங்கப்பட்டுள்ளது. *சிறுவர் பராமரிப்பு நிலையங்களுக்கான தேசிய பொது-தனியார் பங்காளித்துவ நிகழ்ச்சி* என்பது ஆரம்பித்து வைக்கப்பட்டது.

'பெற்றோரின் சுப்பர் சக்தி' பிரசாரம் லியோ பர்னாட் குழுமபத்தின் ஒரு அங்கமான பப்ளிசிஸ் ஸ்ரீலங்காவின் ஆதரவுடன் தயாரிக்கப்பட்டுள்ளது.

***<u>பயன்படுத்தப்பட்ட தரவுகளுக்கான குறிப்புதவிகள்:</u>***

** புள்ளிவிபரவியல் சுகாதார ஆய்வு 2016, சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம், இலங்கை*

*** சிறுபராயத்தில் வன்முறையை அறிந்து கொள்ளுங்கள், 2017. சிறுபராயத்தில் வன்முறையை இல்லாதொழித்தல்: உலக அறிக்கை 2017, புது டில்லி, இந்தியா*

**###முற்றும்###**

**<u>யுனிசெப் குறித்த மேலதிக தகவல்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்:</u>**

**ஜெரமி ஸ்பிரிகே, தொடர்பாடல் நிபுணர், யுனிசெப் இலங்கை**
தொ.பே: +94 77 723 6548, jsprigge@unicef.org

**சுசான் வூஸ்டர் பிரேமதிலக்க, தொடர்பாடல் அதிகாரி, யுனிசெப் இலங்கை**
தொ.பே: +94 77 316 5378, swooster@unicef.org

**<u>ஆசிரியர்களுக்கான குறிப்புகள்:</u>**

**யுனிசெப் இலங்கைப் பற்றி…**

யுனிசெப்பின் நடவடிக்கை அனைத்திலும், ஒவ்வொரு குழந்தையினதும் உரிமைகள் மற்றும் நலனை முன்னிறுத்துகின்றது. எமது பங்காளர்களுடன் இணைந்து 190 நாடுகளில் மற்றும் பிராந்தியங்களில், பாதிக்கப்படக் கூடிய மற்றும் ஒதுக்கப்பட்ட சிறுவர்களை எட்டுவதற்கான விசேட முயற்சியுடன், அனைத்து சிறுவர்களுக்கும் பயனளிக்கக் கூடிய வகையில், எல்லா இடங்களிலும் எமது உறுதிமொழியை நடைமுறையாக மாற்றுவதற்காக நாம் பணியாற்றுகின்றோம். யுனிசெப் இலங்கை குறித்த மேலதிக தகவல்களுக்கு விஜயம் செய்யுங்கள்: www.unicef.lk